செய்தி வெளியீடு எண்.180 நாள்.03.04.2017

# திருவள்ளூர் மாவட்ட விளையாட்டரங்கத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு நீச்சல் குளம் திறக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

~~~~~~~~

திருவள்ளூர் மாவட்டம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், ஒருங்கிணைந்த விளையாட்டரங்க வளாகத்தில் அமைந்துள்ள புதியதாக கட்டப்பட்ட நீச்சல் குளத்தினை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி அவர்கள் 04.03.2017 அன்று காணொலி மூலம் திறந்து வைத்தார்கள்.

நீச்சல் குளம் தற்போது பொது மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். நீச்சல் குளம் காலை 6.00 மணி முதல் மாலை 7.30 மணி வரை இயங்கும். தினசரி காலை 8.00 மணி முதல் காலை 11.45 மணி வரை மற்றும் பிற்பகல் 01.45 மணி முதல் மாலை 5.15 மணி வரை பொதுமக்கள் பயன்படுத்தலாம். காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை பெண்களுக்கு மட்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாதாந்திர, காலாண்டு, அரையாண்டு மற்றும் ஆண்டு சந்தாதாரர்கள் நீச்சல் குளத்தை பயன்படுத்துவோர் அதற்குறிய கட்டணத்தை செலுத்தி பயன்படுத்தலாம். நீச்சல் தெரியாதவர்கள் அதற்கான பயிற்சி மேற்கொண்டு நீச்சல் குளத்தினை பயன்படுத்தலாம். நீச்சல் நன்றாக தெரிந்தவர்கள் ஒரு மணி நேரத்திற்கான நுழைவு சீட்டு பெற்று பயன்படுத்தலாம். 16 வயதுக்குட்பட்டோருக்கு ரூ.30/-ம், 16 வயது, அதற்கு மேற்பட்டோருக்கு ரூ.50/-ம் ஒரு மணிநேரத்திற்கு கட்டணமாக செலுத்தி பயன்படுத்தலாம்.

நீச்சல் தெரியாதவர்கள் (Learn to Swim) அதற்கான பயிற்சி மேற்கொள்ள 12 வகுப்புகளுக்கான கட்டணம் ரூ.1000/- செலுத்தி பயிற்சி எடுத்துகொள்ளலாம். 01.04.2017 அன்று முதல் கோடைக்கால நீச்சல் பயிற்சிக்கான வகுப்பு துவங்கவுள்ளது. நீச்சல் குளத்தை பயன்படுத்துவோர் அதற்கான நீச்சல் உடை அணிந்து வருதல் வேண்டும். நீச்சல் உறுப்பினராக சேருவதற்கு மருத்துவ சான்றிதழ் அவசியமானதாகும். மேலும் விவரங்களுக்கு மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலரின் தொலைபேசி எண்ணில் (7401703482) தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~~~~